அகலப்படுத்த முடியுமோ அந்த அளவுக்குச் செய்ய அதிகாரிகளை ஆய்வு செய்யச் சொல்லி இந்த ஆண்டு அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான நடைமுறைகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 89, திரு. ஆர்.பி. பரமசிவம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

89—

வீட்டுத் தோட்டங்களுக்கு பப்பாளி மரக்கன்றுகள் இலவசமாக வழங்குதல்

**35618 திரு. ஆர். பி. பரமசிவம்:*

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீட்டுத் தோட்டங்களில் பப்பாளி வளர்க்க தோட்டக் கலைத் துறை மூலம் இலவசமாக கோ. 6 பப்பாளி மரக்கன்றுகள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தோட்டக்கலைத் துறையின் ஊரகப் பகுதியில் ஊட்டமிகு பழத் தோட்டம் அமைக்கும் திட்டத்தின் மூலம் வீட்டுத் தோட்டங்களில் பப்பாளி வளர்க்க இலவசமாக பழக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்ற இத்திட்டத்தில் கோ. 6 பப்பாளி மரக்கன்றுகளையும் விநியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முற்பகல் 10–30

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரப்புறத்தில் உள்ளவர்களும் இந்தப் பப்பாளியினுடைய சிறப்பை உணர்ந்து. தங்களுடைய வீட்டுத் தோட்டங்களிலும் இந்தப் பப்பாளிக் கன்றுகளை வளர்த்து பலன் அடைய விரும்புகிறார்கள். எனவே சென்னை, மதுரை, கோவை போன்ற பெரு நகரங்களில் வேளாண்மைத் துறை மூலமாக இலவசமாக இந்தக் கன்றுகளை

1994 நவம்பர் 10]

வினியோகித்து இந்தத் திட்டத்திற்கு உதவுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். ஊரகப் பகுதிகளில் ஊட்டம் மிகுந்த பழத் தோட்டங்களை அமைப்பதற்குத்தான் அரசு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. வசதி படைத்த நகரங்களில் வாழ்கின்றவர்கள் ஐந்து நட்சத்திர ஓட்டல்களிலே சென்றுகூட பழங்களை உண்ணுகின்றார்கள். ஏழை எளிய மக்களுடைய பிள்ளைகள் அனைத்து ஊட்டச் சத்துக்களையும் பெற வேண்டும் என்கின்ற நோக்கத்தில்தான் இதுபோன்ற திட்டங்கள் ஊரகப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டு இந்தத் திட்டத்திற்காக ஒரு வீட்டுக்கு 50 ரூபாய் மதிப்புள்ள பழக் கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டது. இதற்கு கடந்த ஆண்டு ஏறத்தாழ 30 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டு 18 லட்சத்து 75 ஆயிரம் ரூபாயை ஒதுக்க அரசு உத்தரவுகளை வழங்கியுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கோ. 6 பப்பாளி ஒரு வகை மருந்துக்குப் பயன்படுகிறது. பப்பைன் என்ற மருந்துப் பொருள் அதிகமாகக் கிடைக்கின்ற வகையைச் சார்ந்ததாக உள்ளது. எனவே அதிக முக்கியத்துவம் வாய்ந்த இந்த கோ.6 பப்பாளிக் கன்றுகளை விவசாயிகளுக்கு அதிகமாக விநியோகம் செய்து அதன் மூலம் கிடைக்கின்ற பப்பைன் என்ற மருந்து வகையை அவர்கள் எடுப்பதற்கு உதவுகின்ற வகையில் அதைப்பற்றி அவர்களுக்கு இலவசமாகக் கற்றுத் தருவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோ. 6 என்ற பப்பாளிப் பழத்திலிருந்து அதனுடைய பால் எடுக்கப்பட்டு அதிலிருந்து பப்பைன் என்று சொல்லக்கூடிய ஒரு பொருள் தயாரிக்கப்பட்டு வெளிநாடுகளுக்கு எல்லாம் ஏற்றுமதி செய்கிறார்கள். அதுபோக காய்கள் பழமாகப் பழுத்த பின்னர் பழங்களாகவும் பயன்படுத்தப்படுகிறது. அதனுடைய அவசியத்தை அறிந்த பின்னர் "திசுக் கல்சர்" முறையிலே அந்த பழக்கன்றுகளை உற்பத்தி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது. தனியார்கள் இதுபோன்ற தோட்டங்களை

அமைத்து பப்பைன் என்று சொல்லக்கூடிய அந்தப் பொருளை விற்பனைக்குக் கொண்டுவரும்போது அவர்களுக்கும் அரசு ஆலோசனைகள் வழங்குகிறது. அதற்காக நிதிகளைப் பெறுவதற்கும் அரசாங்கம் உதவுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 90, திரு. சி. இராமசுவாமி, மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர்.

90—

கேபிள் டி.வி. ஒளிபரப்பாளர்களுக்கு கேளிக்கை வரி விதித்தல்

***20192 திரு. சி. இராமசுவாமி:**

மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) "ஸ்டார் டி.வி." நிகழ்ச்சிகளை டிஸ்க் ஆன்டெனா மூலம் ஒளிப்பரப்புபவரிடமிருந்தும், கேபிள் டி.வி. மூலம் ஒளிப்பரப்புபவரிடமிருந்தும் கேளிக்கை வரி வசூலிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிகவரித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஸ்டார் டி.வி. மட்டும் அல்லாது பல்வேறு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை டிஸ் ஆன்டெனா மற்றும் கேபிள் டி.வி. மூலமும் ஒளிபரப்புபவர்களிடமிருந்து 40 சதவீதம் கேளிக்கை வரி வசூலிக்க கடந்த பட்ஜெட் கூட்டத் தொடரில் மசோதா நிறைவேற்றப்பட்டு தற்போது அந்த மசோதா சட்டமாக்கப்பட்டு 1-9--1994 முதல் அமுலில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்டார் டி.வி. நிகழ்ச்சிகளை டிஸ்க் ஆன்டெனா மூலம் ஒளிபரப்புபவர்களிடமிருந்தும், கேபிள் டி.வி. மூலம் ஒளிபரப்புபவர்களிடமிருந்தும் கேளிக்கை வரி வசூலிக்கப்படுவது சம்பந்தமாக அந்த நிகழ்ச்சிகளை நடத்துபவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று இடைக்காலத் தடை உத்தரவு வாங்கியுள்ளார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.